பரப்பில் மலர்ப் பூங்கா ஒன்றினை ரூ.24.85 கோடி திட்டச்செலவில் டிட்கோ நிறுவனம் கூட்டு முயற்சியில் அமைத்து வருகிறது. இப்பூங்காவில் 50 மலர் வளர்ப்புப் பிரிவுகளுக்குத் தேவையான முழுமையான உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படவுள்ளது. மத்திய செய் முறை இல்லம் கட்டப்பட்டு வருகிறது. இதில் உள்ள இடம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் மலரின வளர்ப்பு குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இப்பூங்கா 2003-2004 ஆம் ஆண்டில் இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் வெற்றியுடன் செயலாக்கப்பட்ட பின்னர், இதுபோன்ற பூங்காக்களை மற்ற இடங்களில் அமைக்க, சந்தை நிலவரம் மற்றும் அவ்விடங்களில் உள்ள தட்பவெட்ப நிலைகளை அறிந்து, தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்கள் மூலமாக ஆவன செய்யலாம் என டிட்கோ நிறுவனம் கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. அ. நடராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

47—

கால்நடை மருத்துவமனை

***10405—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சி, ஆய்ந்தாக்கம் கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் பகுதியிலே கடந்த வருடம் கால்நடைகளை கோமாரி நோய் தாக்கிய நேரத்தில் போர்க்கால நடவடிக்கையாக போதிய மருந்துகளுடன் மருத்துவக் குழுவை அனுப்பி 5000-க்கும் மேற்பட்ட கால்நடைகளை காப்பாற்றிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2004 பிப்ரவரி 12]

பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் உயிர்நாடியான கால்நடைகள்மீது அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 72 கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியதுபோல, வரும் நிதி ஆண்டிலாவது அன்னியூரில் கால்நடை மருந்தகம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆய்ந்தாக்கம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்துவது பற்றி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை இம்மாமன்றத்திற்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் நலன் கருதி குத்தாலம் ஒன்றியம் திருவாவடுதுறையிலும், குடவாசல் ஒன்றியம் ஆலத்தூரிலும், கால்நடை பார்வை நிலையமும் 8 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு கால்நடை நிலையமே இல்லாத 18 புதுக்குடி கிராமத்தில் துணை நிலையமும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுகுறித்தும் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை இல்லாத பகுதிகளில், ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்துவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தற்போது போதுமான பணிகள் கிடையாது. அவர்களை வைத்து, நடமாடும் மருத்துவமனையாக, கால்நடை மருத்துவமனை இல்லாத பகுதிகளில் நடமாடும் மருத்துவமனையை உருவாக்க, அந்த

ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய கால்நடை மருத்துவர்களைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். ஆகவே அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து வருகிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48 மற்றும் 49, தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் 50, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

50—

தொகுதிகளின் மறுவரையறை

***35352—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா, விருத்தாசலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட 20 ஊராட்சி மன்றங்களைத் திரும்பவும் விருத்தாசலம் தொகுதியிலேயே சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2003 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 87-வது சட்டத்திருத்தத்தின்படி, ஒவ்வொரு மாநிலத்திலுள்ள மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மாற்றி மறுவரையறை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.